யாழ்ப்பாணம்

# இரு மாகாண சபைகளின் செயற்பாடு நிறுத்தம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 14 இதழ் 101

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27 — 05 — 1993

## நீதிமன்று உத்தரவு

(கொழும்பு)

தென் மாகாணம், வடமேல் மாகாணத்தில் ஐக்கிய தேசிய கட்சி முதலமைச்சர்களை நியமித்தது சம்பந்தமாக எதிர்க் கட்சிகள் தாக்கல்செய்த வழக்கில் நீதிமன்ற இறுதித்தீர்ப்பு வரும் வரைக்கும் மாகாண சபைகளின் செயற்பாட்டை இடைநிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் இந்த இரு முதலமைச்சர்களையும் பணித்துள்ளது என்று 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க

## ஜூன் 3ம் திகதிக்கு

### விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா, தென்மாகாண முதலமைச்சர் எம். எஸ். அமரசிறி ஆகியோரை அவர்களது பணிகளிலிருந்து நிறுத்தி வைக்கும் அறிவித்தலை மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுக்காலை வடமேல் மாகாண ஆளுநர் மொன்டேகு ஜயவிக்கிரம பெரேரா, தென் மாகாண ஆளுநர் எம். ஏ. பாக்கீர் மாக்கார் ஆகியோருக்கும்,

(-2ம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் சவானுக்கு பதிலடி

# இந்திய-இலங்கைபடைகளால்

# புலிகளை ஒடுக்க முடியவில்லை!

## முதல்வர் ஜெயலலிதா சாடல்

(சென்னை)

இலங்கையில் பல மாதங்கள் தங்கியிருந்த இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கை இராணுவத்துடன் இணைந்தும் கூட விடுதலைப் புலிகளை அழித்துவிட முடியவில்லை என தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கடுமையாகச் சாடியுள்ளார்.

தமிழக சிறையிலிருந்து 3வது மீது தான் சந்தேகம் கொள்வ எழுதிய கடிதத்திலேயே
முறையாக புலிகள் வதாக திரு. எஸ். பி. செல்வி ஜெயலலிதா இவ்
இயக்க போராளி தப்பியுள் சவான் குறிப்பிட்டதற்கு வாறு குறிப்பிட்டுள்ளார்.
ளது குறித்து தமிழக அரசு பதில் அளித்து அவருக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்குதல்

### 3 ரெலோவினர் பலி

(வவுனியா)

விடுதலைப் புலிகளுக்கும், ரெலோவுக்கும் இடையில் வவுனியாவில் இடம் பெற்ற மோதலில் மூன்று ரெலோ உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை ஏழேகால் மணியளவில் வவு

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நடமாட்டத்தால் பாதுகாப்பு நிலைமை சீர்கேடு

(சென்னை)

தமிழ் நாட்டில் பாதுகாப்பு நிலைமை சீர்கெட்டுவருவதாக இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி ஆழ்ந்த கவலை கொள் வதாக அந்த கட்சியின் பொதுச் செயலாளர் நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் இறை

(2-ம் பக்கம் பார்க்க)

### மணலாறில்

## ஒரு சிப்பாய் பலி

## ஐவர் படுகாயம்

(கொழும்பு)

மணலாறு பகுதியில் நேற்று முன் தினம்விடுதலைப்புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி ஒரு இராணுவ சிப்பாய் உயிரிழந்ததுடன் ஐவர்படுகாயமடைந்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு அகதிகளுக்கு மேற்கு நாடுகள் கதவடைப்பு

(லண்டன்)

ஐரோப்பிய குடும்ப நாடுகளுக்குள் வந்தேறு குடியேற்றத்தை தடுக்கும் முயற்சியாக ஜேர்மனியில் புதிய சட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல பிரான்சுக்குள் வெளிநாட்டவர் நுழைவதையும் அங்கு தங்குவதையும் கடினமாக்கும் புதிய சட்டங்களை, பிரான்ஸின் புதிய வலதுசாரி அரசு அறிமுகப் படுத்தி வருகிறது.

ஐரோப்பிய குடும்ப இதர நாடுகளிலும் சட்டவிரோத மாக வந்தேறு குடியேற்றத்தை எவ்வாறு தடுக்கலாம் என்று ஆராய ஐரோப்பிய குடும்ப நாடுகளின் அமைச்சர்கள் அடுத்த வாரம் கூடுகிறார்கள்.

(2-ம் பக்கம் பார்க்க)

## ★ கொப்பேகடுவ மரணம்:

## பிரிட்டிஷ் நிபுணர்

### விசாரணைக்கு அழைக்கப்படலாம்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் கொப்பேகடுவ மரணம் குறித்த சர்வதேச விசாரணைக்குழுவின்முன் இந்தச் சம்பவத்தை ஆராய்ந்த பிரிட்டிஷ் ஆய்வாளர்களைச்சாட்சியமளிக்குமாறு கோரப்படலாமென்று வழக்கறிஞர் ரஞ்சித் அபயசூரியா

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் நகரில்

### அகதிகள் ஆர்ப்பாட்டம்

(பொன்)

ஜேர்மனியில் வெளிநாட்டு அகதிகளுக்கு புகலிடமளிப்பது குறித்த சட்டம் மாற்றப்படவுள்ளதை ஆட்சேபித்து ஜேர்மன் நாடாளுமன்றத்தைச் சுற்றி பலர் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களுக்கான

### கட்டுப்பாடுகள் நீக்கம்

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு நிவாரணமளிக்கும் ஜனாதிபதி விஜயதுங்கவின் ஆலோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

இதன்படி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நியமனக்கடிதங்கள், அவர்களின் சேவைகள் தொடர்பானகட்டுப்பாடுகள் நீக்கப்படவுள்ளன.

ஒரு பாடசாலையில் மாவட்டத்தில் அல்லதுஒரு பிரதேசத்தி

(2-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - ராணுவம் வன்னியில் மோதல்

(வவுனியா)

வவுனியா பம்பைமடு பகுதியில் இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையில் நேற்றுக் காலை கடும் மோதல் இடம் பெற்றுள்ளது.

காலை பத்து மணியளவில் 4சலாடின் வாகனங்கள் 2 கவச வாகனங்களுடன் வந்த 150க்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளை அழைக்க தெரிவுக்குழுவினர் முயற்சி

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலம் சுமுகமான தீர்வொன்றை முன் வைப்பதற்கு தெரிவுக்குழுவின் தலைவரான சுதந்திரக்கட்சி உறுப்பினர் திரு. மங்கள முனசிங்கா மீண்டும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

விரைவில் கட்டவுள்ள தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்கு மிடம் எஸ். கே. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி-28)

### சத்துணவு

துவரம்பருப்பு, சொந்த வளவுகளிலேயே பெறத் துவரம் விதைகள் ரூபா. 5/- பெறுமதி அஞ்சல் முத்திரை அல்லது ஐந்து (5) மில்க்வைற் சவர்க்காரத்தால் வெற்றுப் பக்கற் சேர்ப்பித்து நாற்று விதைகள் பெறலாம். "மில்க்வைற்" (எ 3157)

### வேப்பெண்ணெ

வேம்பு தரும் வேப்பெண்ணெக் கிருமி நாசினி. உங்கள் தோட்டப்பயிர்களேயும், எலுமிச்சை, தோடை, பலா, மா இனங்களை அழிக்கும் பூச்சிகளையும், நோய்களையும் முற்றாகக் கட்டுப்படுத்தவல்லது. 100 வீதம் சுத்தமான இதனை மருந்து தேவைகளுக்கும் பாவிக்க உகந்தது. பாவித்து பயன்பெறுங்கள். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி 34, ஆடியபாதம் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம் (கல்வியங்காட்டு சந்தையிலிருந்து 100 யார்) (கி-132)

### வேப்பம் உரம்

வேம்பு தரும் வேப்பம் உரம் மண்ணிலிருக்கும் பூச்சி, புழுக்களை அழித்து - மண்ணை வளப்படுத்தி பயிர்களை செழித்து வளரச் செய்யும் அபூர்வ உரம். பாவித்து பயனடையுங்கள். எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி, 34, ஆடியபாதம் வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். (கல்வியங்காட்டுச் சந்தையிலிருந்து 100 யார்) (கி-133)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை சுாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி கி. இராசரத்தினம்.121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (கி-113)

## மண்ணெண்ணெ விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கு ஒரு லீற்றர் 15 ரூபா வீதம் 5 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. (56 இ)

## தொண்டர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நிரந்தர நியமனம் பெறத் தவறிய தொண்டர் ஆசிரியர்க்கான கூட்டம் எதிர்வரும் 30ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் பட்டப்படிப்பு கல்லூரியில் நடைபெறும். இதில் நியமனம் பெறத் தவறிய அனைத்து தொண்டர் ஆசிரியர்களும் தவறாது சமுகம் தருமபடி சங்கம் அறிவித்துள்ளது.

## முஸ்லிம்களின் விடுதிகளில் தங்க
# தமிழருக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

கொழும்பில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான லொட்ஜுகளில் யாழ்ப்பாணத் தமிழர்களை தற்போது தங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா கொலைசெய்யப்பட்ட பின்பே இந்தநிலை உருவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

மே 1ம் திகதி பிரேமதாசா கொலைசெய்யப்பட்டார் என்ற செய்தி கொழும்பு நகரில் பரவியதும் கொழும்பிலிருந்த பல முஸ்லிம் லொட்ஜ்களில் இருந்த தமிழர்களை உடனடியாக வெளியேறும்படி உரிமையாளர்கள் கட்டாயப்படுத்தினார்களாம். பல ஆயிரம் ரூபாய் முற்பணம் செலுத்தி தனி அறைகளில் தங்கியிருந்த சிலர் மறுப்புத் தெரிவித்ததும் உடனடியாக பொலிசாரை அந்த லொட்ஜ் உரிமையாளர்கள் அழைத்து அவர்களின் உதவியுடன் பலரை வெளியேற்றினார்களாம்.

இதே வேளையில் மே மாதம் 1ம் திகதி இரவு அச்சத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு வவுனியா செல்வதற்கு வந்தபோது பல பயணிகளிடம் பணமும், நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டதாம்.

இதைத் தொடர்ந்து பயணிகள் ரயிலில் ஏறியதும் கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு திடீரென வந்த இராணுவத்தினரும் பொலிசாரும் ரயிலில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது அனைவரும் உடனடியாக இறங்கும்படி ஒலிபெருக்கி மூலம் அறிவித்ததைத் தொடர்ந்து பயணிகள் முண்டியடித்துக் கொண்டு இறங்கி பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினார்களாம். சிறிது நேரத்தின் பின் பயணிகளை ரயிலில் ஏறும்படி பணிக்கப்பட்டதென்றும் இச் சந்தர்ப்பத்தில் பல பயணிகளின் பொதிகள் திருட்டுப் போனதாகவும் கூறப்படுகின்றது. (வி-கி)

## காற்றுடன் கடும் மழை

(அரியாலை)

நேற்று அதிகாலை 4-30 மணி தொடக்கம் கடுங்காற்றுடன் பெரு மழை பெய்தது. இக் கடுங்காற்றினால் அநேக வாழைகள், முருங்கைகள், நிழல் மரவள்ளிகள் ஆகியன வேருடன் சரிந்துள்ளன. -59

## மூன்று மாகாணங்களில்
# இ.தொ. காவிற்கு
## மூன்று அமைச்சர் பதவி

(கொழும்பு)

ஊவா, சப்பிரகமுவா, மத்திய மாகாண சபைகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சிக்கு மூன்று அமைச்சர் பதவிகள் கிடைக்கவுள்ளன.

மேற்படி மூன்று அமைச்சர்களின் பெயர்களை அமைச்சர் தொண்டமான் இன்று அறிவிப்பார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி-கி)

## வடபகுதியில்
## ஆங்கில கல்வித் தரம்
# பெரும் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாணவர்களின் கல்வித் தரம் பெரிதும் வீழ்ச்சியடைந்து வருகிறது. அதிலும் குறிப்பாக வடபகுதி மாணவர்களின் ஆங்கிலஅறிவு பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

அண்மையில் அகிலஇலங்கை நூலகவியல் சங்கத்தினால் நடாத்தப்படும் நூலகவியல் விஞ்ஞான கற்கை நெறிக்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கு நடாத்தப்பட்ட பொது உளச்சார்புப் பரீட்சையில் எவருமே ஐம்பதிநேழு புள்ளிகளுக்குமேல் பெறவில்லை என இலங்கை நூலகவியல் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் திரு மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இப்பரீட்சை ஆங்கிலமொழி மூலம் நடாத்தப்பட்டது.

இந்தப் பரீட்சைக்குபட்டதாரிகளும் தோற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது. (159 கி)

## பெரியபுராண படனபூர்த்திவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம் பெரிய புராண படன பூர்த்திவிழா தேவஸ்தான புராணபடன மண்டபத்தில் எதிர்வரும் 2ம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும்.

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

# கைதடி ஆஸ்பத்திரி
## விரைவில் தரம் உயரும்

(கொழும்புத்துறை)

கைதடியிலுள்ள சித்தமருத்துவ போதனா வைத்தியசாலை தரம் உயர்த்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலையில் குழந்தைகள் வார்ட் ஒன்றும் சத்திர சிகிச்சை வார்ட் ஒன்றும் கூடிய கெதியில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

யாழ்ப்பாணம் சித்த மருத்துவத்துறை மாணவர் சங்கத்துடன் நடாத்திய பேச்சுக்களிலேயே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயம் தொடர்பாக சுதேச வைத்திய அமைச்சு செயலாளர் ஐயாலிய மொட்டை இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154-கி)

**புலிகளின்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களிலிருந்து தப்பியிருப்பது தமிழகத்தில் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது என்றும் புலிகளுக்கு எதிராக இடைவிடாத இயக்கத்தை மாநில ஆட்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

புலிகள் கடல் வழியாக ஊடுருவி வந்து தமிழகத்தில் பாதுகாப்பு நிலைமையை சீர்குலையாது இருக்க முதலமைச்சர் மத்திய அரசின் உதவியை நாட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (கே - சி)

**வெளி நாட்டு**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டின் இறுதியில் ஐரோப்பிய குடும்ப நாடுகளின் அமைச்சர்கள் சந்தித்து பேசியபோது ஐரோப்பிய குடும்பநாட்டைச் சாராத ஒரு நாட்டிலிருந்து ஐரோப்பிய குடும்ப நாடினுள் அகதியாக நுழையும் ஒருவர் அவர் புறப்பட்டு வந்த நாட்டுக்கே திருப்பி அனுப்பப்படுவர் என்று முடிவு செய்தது.

ஐரோப்பிய குடும்ப நாடுகளில் சட்ட விரோதமாக தங்கியிருக்கும் வெளிநாட்டவர், சட்ட விரோதமாக தொழில் பார்ப்போரை கண்டு பிடிக்கவும் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றவும் ஆவன செய்யப்பட வேண்டுமென்று இப்போது பிரேரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் ஹோபன் ஹேகனில் ஐரோப்பிய சமூக அமைச்சரவைகள் கூடி இது பற்றி மேலும் தீர்மானம் எடுக்கவுள்ளனர். (கே-கி)

## தமிழர் பிரச்னை தொடர்பாக
# நிலைப்பாட்டைத் தெரிவிக்க
# சிங்களகட்சிகள் தவறிவிட்டன

(கொழும்பு)

இலங்கையில் சிறுபான்மையினமான தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நீதியான முறையில் தீர்வுகாண்பதில் தமது நிலைப்பாடு என்ன என்பதனை சிங்கள பேரினவாதக் கட்சிகள் முன்வைக்கத் தவறிவிட்டதாக கொழும்பு தினசரி ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: சிறுபான்மையினரை ஒடுக்க முற்பட்டதாலேயே நாடு நிம்மதியிழந்தது.

அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் தமது குறுகிய லாப நோக்கை கைவிட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

நாடாளுமன்ற தெரிவுக் குழு விவகாரம் வெறுமனே சறுக்கிய விவகாரமாகிவிட்டதென்றும் அப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

**ஆசிரியர்களுக்கான**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் சேவையாற்ற வேண்டிய காலம் குறித்து விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது. பயிலுனர் ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகை கிடைக்கும்.

1992ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி முதல் 3 வருட சேவைகளை பூர்த்தி செய்த பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களின் நியமனத்தை உறுதிப்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகளெடுக்கப் பட்டுள்ளன.

கடந்த ஆண்டிலும் இந்த ஆண்டிலும் நியமிக்கப்பட்ட 6ஆயிரம் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர் நிரந்தர பட்டதாரி ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவர் இந்த ஆண்டு ஜூன் முதலாம் திகதிக்கு பின்னர் இவர்கள் ஒரு வருட கால சேவையை பூர்த்திசெய்ய வேண்டும்.

சேவைக் காலத்தின்போது பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட 2 ஆயிரம் ஆசிரியர்களும் நிரந்தர பட்டதாரி ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். பட்டப் படிப்பின்பின் அவர்கள் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி ஒரு வருட சேவையை பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

பதில் பாடசாலை அதிபர்களும், அதிபரின் கடமையைச் செய்யும் ஆசிரியர்களும் ஜூன் முதலாம் திகதி ஒரு வருட சேவையை திருப்திகரமாக பூர்த்தி செய்திருந்தால் அவர்கள் அந்தப் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள். (கே-கி)

**ஜூன் 3ம் திகதிக்கு**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப்பட்ட முதலமைச்சர்களுக்கும் விடுத்தது.

திரு. காமினி ஜயவிக்கிரம பெரேரா, திரு. என். அமரசிறி ஆகியோரின் நியமனங்களை ஆட்சேபித்து வடமேல் மாகாண சபை அங்கத்தவர்கள் ஜி. எம் பிரேமசந்திரவும் தென் மாகாண சபை அங்கத்தவர் அமரசிறி தொடங்கொடவும் 4 மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

இந்தமனுக்களை விசாரிக்கும் நீதியரசர்களான சரத் எம். சில்வா, ஹமீத் இஸ்மாயில் ஆகியோர் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு நான்கு அறிவுறுத்தல்களை விடுத்தனர்.

பிரதிவாதிகள் இந்த அறிவித்தல்களில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க ஜூன் மாதம் 3ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கேட்கப்பட்டுள்ளது. (கே-கி)


**கோண்டாவில் தில்லையம்பதியில்**
**இன்று இரண்டாம் திருவிழா**



ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே
தொல்லைகள் தீர்ப்பாயம்மா - தேவி

அனுபல்லவி

எல்லையில்லா அருளை அள்ளித் தருபவளே
இங்கேயே வேறுகதி நல்ல நகர்க் கோண்டாவில்
தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே
தொல்லைகள் தீர்ப்பாயம்மா-தேவி

ஆக்கம்:
கவிமாமணி ந. வீரமணிஐயர்
(கி143)

யாழ்ப்பாணம்

# வீரப்பனின் சகாக்கள் மூவர் தமிழக காட்டில் சுட்டுக்கொலை

## - கடும் மோதலின் பின் சம்பவம் -

(சென்னை)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனையும் அவனது கூட்டாளிகளையும் தேடும்பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடுசிறப்பு அதிரடிப் படையினர் இந்தக் குழுவைச் சேர்ந்த மூவரைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

இதேவேளை வீரப்பனையும் மற்றவர்களையும் கைதுசெய்யும்பணியில்காவல்துறையினர் முக்கிய கட்டத்தை அடைந்துள்ளனர் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தமிழகாவல்துறைதலைமை இயக்குனர் திரு. டபிள்யூ ஐ. தேவாரம் தலைமையில் மேட்டூர் பகுதியில் பெரியதண்டா என்னும் காட்டுப்பகுதியில் அதிரடிப் படையினர் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த போது ஒருமலை உச்சியிலிருந்து கைக்குண்டுகள் வீசப்பட்டன.

இதனைத்தொடர்ந்து அதிரடிப் படையினர் சுட்டதில் வீரப்பன் கும்பலைச் சேர்ந்த மூன்று பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 600 கிலோ கிராம் வெடிமருந்துப் பொருட்களும் 600 மீற்றர் கம்பி வயர்களும் பற்றறியில் இயங்கும் 18 கண்ணி வெடிகளும், இரண்டு துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்ட சந்தனமரக் கடத்தல்காரர் வீரப்பன் கோஷ்டியைச் சேர்ந்த மூவரின் சடலங்களும் மேட்டூருக்கு எடுத்துவரப்பட்டு மேலும் துப்புத்துலக்க காவல்துறையினர் நடவடிக்கை எடுத்துவருவதாக அவர் கூறினார்.

காவல்துறையின் இந்தச் சாதனையை முதலமைச்சர் பாராட்டியுள்ளார்.

இதேவேளை வீரப்பன் கோஷ்டியை தேடும் கர்நாடக சிறப்பு அதிரடிப்படை மலைப் பகுதியொன்றில் 4 குண்டு எறியும் சாதனங்களையும் 29 உள்நாட்டில் தயாரான கைக்குண்டுகளையும் மற்றும் வெடி பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் இந்தப் படையினர் வீரப்பன் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவரைச் சுட்டுக்கொன்றுள்ளனர். இந்த சம்பவத்தில் படையினர் தரப்பில் ஒருவர் காயமடைந்துள்ளார். (ரி-சி)

# எம். பிக்களை சந்திக்க ஜனாதிபதி முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா மாதத்தில் ஒருதடவை நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் அடுத்த மாதத்தில் இருந்து இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றக் கூட்டத் தொடரின்போது நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியிலுள்ள ஜனாதிபதியின் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம் பெறும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரையும் சந்தித்து சீராக கலந்துரையாடல் நடாத்துவதற்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி-இ)

# டோக்கியோ கண்காட்சியில் தமிழிலும் நல்வரவு

(டோக்கியோ)

அண்மையில் டோக்கியோவில் நடைபெற்ற மாணிக்கக் கற்கள் கண்காட்சியில் இருபத்திமூன்று மொழிகளில் நல்வரவு எழுதப்பட்டிருந்தது. இதில்தமிழிலும் நல்வரவு எழுதப்பட்டிருந்தது

தமிழுக்கு பதினாவது இடம் கிடைத்தது. நாற்பது நாடுகளைச் சேர்ந்த மாணிக்கக்கல் வியாபாரிகள் இக்கண்காட்சியில் கலந்துகொண்டனர். இலங்கை, சிங்கப்பூர், பங்களாதேஷ், ஹொங் கொங் ஆகிய நாடுகளிலிருந்து பல தமிழர்கள் இக்கண்காட்சியில் கலந்துகொண்டமையே இங்கு தமிழிலும் நல்வரவு எழுதப்பட்டமைக்குக் காரணமாம். -159-இ

# பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் ரத்து

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களை இடமாற்றம்செய்வதற்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அதிபர்கள், பொலிஸ் அதிபர்கள் ஆகியோரிடமிருந்து வந்த அதிகாரங்கள் ஜனாதிபதி விடுத்த விசேட உத்தரவின்பேரில் நேற்று முன்தினம் முதல் உடனடியாக ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

இந்த மாதம் 18-ம் திகதிக்குப் பின்னர் இவ்விதம் இடம் பெற்ற இடமாற்றங்களும் ரத்துச்செய்யப்பட்டு மாற்றப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை மீண்டும் பழைய நிலையங்களுக்கே அனுப்ப வேண்டுமென்றும் இந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி-இ)

# இன்று

(வட்டுக்கோட்டை)

அராலி சரஸ்வதி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி. ப 2 மணியளவில் வித்தியாலய அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறும். (139)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். கூடைப்பந்தாட்ட சங்க அங்குரார்ப்பண கூட்டம் இன்று 27ம் திகதி பி. பகல் 4-30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித் துறைப்பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. -க-சி

0 0 9

(யாழ்ப்பாணம்)

யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று 27ம் திகதி வியாழக்கிழமை பி. ப.2-00 மணிக்கு அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கமும் சிறப்பு விருந்தினராக திரு. க. அருள்மாஸ்ரர், உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. த அருணகிரிராஜா, பொறுப்பாளர் அராலி தமிழீழ கடற்புலி திரு. தி. பாலகுமார் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (வி)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை சிவன் கோவிலில் இன்று காலை 7 மணிக்கு இலட்சார்ச்சனை நடைபெறும். நாளை வெள்ளிக்கிழமை சங்காபிஷேகமும் பி பகல் 4 மணிக்கு 'ஆலய வழிபாடு' என்னும் பொருளில் திரு. தி. பொன்னம்பலவாணரின் சொற்பொழிவும் இடம்பெறும். (க)

# பிரதிகல்விப்பணிப்பாளராக நியமனம் பெறலாம்

(திருநெல்வேலி)

1982-ம் ஆண்டு 4-ம் மாதம் 22-ந் திகதிக்கு முன்னர் தரம் இரண்டு பெற்ற ஆசிரியர்களை பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கலாம் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது

இவர்கள் நிரந்தர அதிபர்களாக அன்றி உதவி ஆசிரியர்களாகவே இருந்து வந்தனர்.

இவ் அறிவித்தலின்படி பலர் இப் பதவி உயர்வைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

ஆனாலும் இத்தரங்களில் உள்ள பலர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளனர் தற்போது கடமையிலிருப்போருக்கு இப் பதவிஉயர்வு வழங்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. -157-இ

# முதல்வர்கள்தெரிவு

## ஆட்சேப மனு விசாரணை

(கொழும்பு)

வடமேல், தென்மாகாண சபைகள் இரண்டினதும் செயற்பாடுகளை இடைநிறுத்தக்கோரி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரு மனுக்களுக்கு அனுசரணையாக மனுதாரர்களின் சட்டத்தரணி தமது வாதங்களை உயர்நீதிமன்றில் நேற்று முன்வைத்தார்.

இந்த ஆட்சேப மனுவை பொதுசன ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியும் கூட்டாக சேர்ந்து உயர்நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தன. (ரி-இ)

# இனப்பிரச்னை தீர்ந்தால் வடக்குகிழக்கில் அபிவிருத்தி

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டால் வடக்கு-கிழக்குப் பகுதியில் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும் என இலங்கை—கனடா அபிவிருத்தி நிதிய தூதரக அதிகாரி ஹென்றி கினதெரு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் காலை மேற்படி அலுவலகத்தில் நடைபெற்றபத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றுகையில் இதனை அவர் தெரிவித்தார். -க-இ

## இராசி பலன்

27-05-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 14)

ஷஷ்டி பி. ப. 1-58 வரை ஆயிலியம் மு. இ. 11-40 வரை இராகுகாலம் பகல் 1-22 முதல் 2-52 வரை, சுபநேரம் காலை 7-22 முதல் 8-52 வரை ஷஷ்டி விரதம் சித்தாமிர்தயோகம்.

மேடம்: மன உளைச்சல், காலதாமதம், குடும்பபிரிவு.

இடபம்: தொழில் முதலீடு, கடன்வசூல், உல்லாசம்.

மிதுனம்: கண்டிப்பு, தொழில் போட்டி, யோசனை.

கடகம்: இனிமையாட்சி, உறவினர் மகிழ்ச்சி, செலவு.

சிங்கம்: பயணத்தடை, குடும்பகை. அலைச்சல்.

கன்னி: பிறர் பாராட்டு, கல்வி சிறப்பு. தெய்வீகசெலவு

துலாம்: விருந்து வைபவம், போட்டி நீங்குதல், பணவரவு

விருச்சிகம்: கடும் சினம், வாய்த்தர்க்கம், மனச்சுமை.

தனுசு: வழித்தொல்லை, சகோதரபகை, காரியத்தடை

மகரம்: வாக்குவன்மை, புதிய உறவு, சுபயோஜனம்.

கும்பம்: மனக்களிப்பு, பங்காளர் பெருமை, புகழ்.

மீனம்: தப் அபிப்பிராயம், பிறர் தொல்லை, கடன்சுமை.

— ஜோதிடர்

## இந்து இளைஞர் மன்றம்

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை இந்து இளைஞர் மன்றம் அண்மையில் ஈச்சமோட்டை லேட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

நிர்வாகிகள் தெரிவில் தலைவராக ந. சர்வகுணசீலனும், செயலாளராக எ. மோகனச்செல்வனும் பொருளாளராக ச. தவநேசனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் யூன் 04, 05 06ம் திகதிகளில் இடம்பெறவுள்ள ஈழத்து நூல் சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், சித்தமருத்துக் கண்காட்சியில் கண்காட்சி மண்டபத்தில் எம்மால் ஏற்படுத்தப்படவுள்ள புத்தக விற்பனைக் கருமபீடத்தில் ஈழத்துப் பிரசுரங்களை விற்பனை செய்ய விரும்பும் படைப்பாளர்களும் வெளியீட்டாளர்களும்30ம்திகதிக்குமுன்னதாக தொடர்பு கொள்ளுமாறு பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா கேட்டுள்ளார், (கி)

## நாடகக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நாளை 28ம் திகதியும் நாளை மறுதினம் 29ம் திகதியும் கைலாசபதி கலையரங்கில் 'அரங்கு ஒரு கல்வி முறைமையாக' எனும் தலைப்பில் கருத்தரங்கொன்றை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையினர் நடாத்தவுள்ளனர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் குழந்தை ம, சண்முகலிங்கம், நா. சுந்தரலிங்கம், காரை சுந்தரம்பிள்ளை, சோ. பத்மநாதன், கோகிலா மகேந்திரன், சிதம்பரநாதன், வி. சுரேஷ் கனகராஜா, கந்தையா ஸ்ரீ கணேசன் ஆகியோர் உரையாற்றுவர், (கி)

# யாழ். குடா மீனவர்க்கு நோர்வே செஞ்சிலுவை 42 லட்சம் ரூபா உதவி

(தாளையடி)

இடம்பெயர்ந்து வந்து யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் வசிக்கும் கடற்றொழிலாளர்களின் குடும்பங்களுக்கு அண்மையில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு உதவியாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளைமூலமாக நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் ரூபா நாற்பத்திரண்டு இலட்சம் வழங்கியிருந்தது

யாழ்ப்பாணக் கிளையின் முப்பத்தொன்பது இலட்சம் ரூபாவிற்கு கடற்றொழில் உபகரணங்கள் ஆறு மாதத்திற்கு முன்னர் கொள்முதல் செய்யப்பட்டும் கூட்டுப்படை தலைமை அலுவலக அனுமதி கப்பல்களில் இடம் கிடைக்காமையினால் இதுவரை இங்கு வந்துசேரவில்லை.

இதுபற்றி கொழும்பு தலைமை அலுவலக அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கேட்டபோது தாமதமின்றி அடுத்துவரும் கப்பலில் கடற்றொழில் உபகரணங்களும் நாற்பது தையல் இயந்திரங்களும் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்வதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தலைமைச் செயலக செயற்பாட்டு இயக்குனர் திரு. சீ. ஞானதேவா கூறினார். 163-சி

# கம்போடியா தேர்தலில் பெருமளவினர் வாக்களிப்பு

(லண்டன்)

கம்போடியாவில் பலதசாப்தங்களுக்குப்பின் முதல் தடவையாக ஐ. நா. சபையின் மேற்பார்வையில்நடைபெற்று வரும் தேர்தலில் இலட்சக்கணக்கான மக்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டனர்.

2வது நாள் நடைபெற்ற வாக்களிப்பில் கமரூஜ் அங்கத்தவர்கள் உட்பட 70வீதத்திற்கும் அதிகமானோர் வாக்களிப்பில் கலந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தேர்தலிற்கான வாக்களிப்பு 6 நாட்களுக்குத் தொடர்ந்துநடைபெறும் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

# பாகிஸ்தான் அரசைக் கலைத்த ஜனாதிபதியின் உத்தரவு ரத்து

## சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் கடந்த மாதம் தம்நாட்டு தேசிய சட்டப் பேரவையை கலைத்து விட்டு பிரதமர் நவாப் ஷெரீப் அரசைபதவிநீக்கியஉத்தரவை பாகிஸ்தானின் சுப்ரீம் கோர்ட் நேற்று ரத்துச் செய்துள்ளது.

இந்த சட்டப்பேரவை கலைப்பு உத்தரவுக்கு எதிராய் திரு. நவாப் ஷெரீப் தாக்கல் செய்திருந்த றிட் மனுவொன்றை கடந்த 3 வார காலமாக விசாரித்து வந்த11 நீதிபதிகளை கொண்ட முழு அமர்வு உடனடியாக நவாப் ஷெரீப் அரசாங்கத்தையும் தேசிய சட்டப்பேரவையையும் மீண்டும் ஏற்படுத்தச் செய்வதான உத்தரவுகளை நேற்று வெளியிட்டது.

நவாப் ஷெரீப் அரசை நீக்கியபோது, ஜனாதிபதி தம்முடைய அரசியல் சாசன அதிகார வரம்பையும் மீறிச் செயல்பட்டுவிட்டதாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் தீர்ப்பை நிறுத்தி வைத்திட கோரி தற்காலிக பராமரிப்பு அரசு கோரிய மனுவையும் சுப்ரீம் கோர்ட் நிராகரித்துள்ளது.

இந்த தீர்ப்பு பாகிஸ்தானில் நடந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (கே-இ)

★ மருதானையில்

## வடபகுதி வாலிபர்களின் பணம், நகை, கொள்ளை

(மானிப்பாய்)

மருதானையிலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த வடபகுதி இளைஞர்கள் இருவரின் பணம், நகை என்பன இனந்தெரியாதவர்களினால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் சவூதியில் இருந்து விடுமுறையில் வடபகுதியிலுள்ள தமது இடங்களுக்குச் செல்வதற்காக மேற்படி விடுதியொன்றில் தங்கியிருந்தனர். இவ்வேளை இவர்களது சூட்கேசில் வைக்கப்பட்டிருந்த நகைகளும், ஒரு தொகைப்பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

பின்னர் இவர்களின் பணத்துடன் எடுத்துச் செல்லப்பட்ட சில தஸ்தாவேஜுகள் விடுதிக்குப் பின்புறமுள்ள வாய்க்காலொன்றில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (71-சி)

## தெற்கில் பலத்த மழை மக்கள் அகதிகளாயினர்

(கொழும்பு)

தென்பகுதியில் பெய்து வரும் பலத்த மழையால் ஏராளமான மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளார்கள்.

நுகேகொடையைச் சேர்ந்த 30 குடும்பங்களும், மொறட்டுவையைச் சேர்ந்த 1,500 குடும்பங்களும் வெரகொடையைச் சேர்ந்த 150 குடும்பங்கள் அகதிகளாக உள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற அடைமழையால் சில இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-இ)

## 2-ம் திகதியே விடுமுறை

(கொழும்பு)

ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு யூன் மாதம் முதலாம் திகதிக்குப் பதிலாக மறுநாள் 2-ம் திகதியே அரசாங்க வங்கி விடுமுறையாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (சு-இ)

## 'ராக்கிங்' முறையை ஒழிக்க கோரிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களிலிருந்து "ராக்கிங்" முறையை பூண்டோடு ஒழிக்க சட்ட மூலம் கொண்டுவரப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கொடூரமான ராக்கிங்கால் இன்னும் பல மாணவ மாணவிகள் பலியாவதற்கு முன்னால் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் மிருகத்தனமாக நடைபெறும் ராக்கிங்கை முற்றுமுழுதாக ஒழித்துக் கட்டுவதற்கு புதிய சட்ட மூலம் உடன் கொண்டு வரப்பட வேண்டும் என்று பல்கலைக்கழக உபவேந்தர்கள் பீடாதிபதிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கருத்து தெரிவித்துள்ளார்கள். (வி-இ)

## மரண அறிவித்தல்

### இராஜகோபால் பிறேம்ஆனந்

மட்டக்களப்பு ஒந்தாச்சி மடத்தைப் பிறப்பிடமாகவும் 81, வைரக்காடு வீதி, வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான இராஜகோபால் நாகம்மா அவர்களின் சிரேஷ்ட புதல்வன் பிறேம்ஆனந் கொழும்பில் 23-05-93இல் அகாலமரணமானார். இவர் தேவகலா, தேவராஜன், பிறேம்ஆனந்தி, தர்மினி, ரங்கராஜன், கிருபாகரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 26-05-93ம் திகதி நேற்று கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
த. சிட்டிபாலா
(இ-147)

மணலாறில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகவலை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன நேற்று தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை மணலாற்றுப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடும் மோதல் இடம்பெற்றதும் தெரிந்ததே. (இ)

புலிகள்-ராணுவம்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் மேற்பட்ட படையினருக்கும் புலிகளுக்குமிடையில் சுமார் 30 நிமிடம் கடும் மோதல் இடம்பெற்றது.

மோதலின் பின் படையினர் பலத்த இழப்புடனும், சேதமடைந்த சலாடின் வாகனத்தை கட்டியிழுத்தும் சென்றுள்ளனர். (சி)

இரு மாகாண சபைகளின்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கில், ஐக்கிய தேசியக் கட்சி வழக்கறிஞர்கள் தொடர்ந்து முதலமைச்சர்களை கருமமாற்றவிடும்படியும், நீதிமன்ற தீர்ப்பு வெளிவரும் வரைக்கும் நடவடிக்கைகளை நிறுத்திவைக்கக்கோரி எதிர்க்கட்சிகளும் நீதிமன்றத்தில் வாதாடினர். நீதிமன்றம் அளித்த இந்த இடைக்கால தடைப் பணிப்புகள் எதிர்க்கட்சிகளுக்கு ஒரு வெற்றி போன்றது என்றும் இருந்த போதிலும் ஐக்கிய தேசியக் கட்சி இந்த வழக்கில் தோற்றால் அரசியலரங்கில் மேலும் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்றார். (சு-இ)

தமிழ்க் கட்சிகளை
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுக்குழுவின் கூட்டத்திற்கு கொழும்பிலுள்ள தமிழ்க்கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு இணைப்பை தெரிவுக்குழு தீவிரமாக எதிர்த்து வருவதால் அக்குழுவிலிருந்து தமிழ்க்கட்சிகள் ஏற்கனவே வெளியேறியதும் தெரிந்ததே. (வீ-சி)

புலிகள்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னியா மாவட்டத்திலுள்ள பம்பைமடுவில் இடம்பெற்றது. பம்பைமடு கல்வெட்டு என்ற கிராமத்தில் ரெலோவினர் பொதுமக்களைக் கைது செய்து திரும்பிக்கொண்டிருந்தபோதே அந்தத் திடீர் மோதல் ஏற்பட்டது.

கொல்லப்பட்ட இரு ரெலோவினரின் உடல்களும், ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன. இவர்களினால் கைது செய்யப்பட்டு வந்த பொதுமக்களும் தப்பியோடிவிட்டனர்.

இந்தாக்குதலின்போது ஜி-3. ஏ-3 ரக துப்பாக்கி ஒன்றும் இவைக்குரிய ரவைக்கூடுகள்-5, ரவைக்கூடு தாங்கி-1, ஜி-81 ரக துப்பாக்கி ஒன்று, இதற்குரிய ரவைக்கூடுகள்-5, ரவைக்கூடுதாங்கி-1, தொலைத்தொடர்பு சாதனம்-1, இதற்குரிய ஏரியல்-1, கைக்குண்டு 1, நடுத்தர ரவைகள்-74, நேற்றோ ரவைகள்-79 ஆகிய ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. (சு-இ)

## வீரப்பனைப் பிடிக்க இராணுவத்தை அழை; பொலிஸாரின் மனைவிமார் ஆர்ப்பாட்டம்

(மைசூர்)

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிப்பதற்கு இராணுவத்தை வரவழைக்குமாறு கர்நாடக மாநிலத்தில் ஆர்ப்பாட்டமொன்று நிகழ்ந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை வீரப்பனின் கண்ணிவெடியில் சிக்கி 6 பொலிசார் இறந்ததை யொட்டி பொலிசாரின் மனைவிமார்கள் 50 பேர் தம்மைத் தாமே எரித்து உயிர்விடப் போவதாகக்கூறி ஆர்ப்பாட்டம் செய்து அரசை எச்சரித்துள்ளனர்.

இராணுவத்தை அழைப்பதில்லையென்று தமிழக, கர்நாடக முதலமைச்சர்கள் கூறி வருகின்ற போதிலும், பொலிசார் இப்படி இறந்துகொண்டிருக்க முடியாது. இராணுவத்தை அழைக்கவேண்டியது தான் என்று கர்நாடகஅமைச்சர் சேசவமூர்த்தி கருத்துக் கூறி இருக்கிறார். (சு-இ)

## வீரப்பன் கும்பலுக்கு புலிகளுடன் தொடர்பில்லை

(சேலம்)

"சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கும்பலுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவித தொடர்புமில்லை"

இவ்வாறு கர்நாடக பொலிஸ் தலைமை இயக்குநர் எஸ். எம். எஸ். மூர்த்தி சேலத்தில் செய்தியாளர்களிடையே பேசும்போது குறிப்பிட்டார்.

வீரப்பன் கும்பலை பிடிக்க தமிழக கர்நாடக பொலிசார் இணைந்து செயல்பட்டுவருவதாகவும் அண்மைக்கால கண்ணிவெடித் தாக்குதலுக்கும் புலிகளுக்கும் தொடர்பு மில்லை என்றும் கூறினர். (கே-இ)

கொப்பேகடுவ
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஏற்கனவே இந்த வழக்கை விசாரித்த நீதிபதிக்கோ, கொப்பேகடுவவின் மனைவி லலி கொப்பேகடுவவுக்கோ இக்குழுமுன் சமூகமளிப்பதற்கு உத்தியோகபூர்வமாக அழைப்புக்கள்விடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு-சி)

ஜெர்மன்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் இச்சட்டம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் பெருமளவு வெளிநாட்டு அகதிகள் கலந்து கொண்டனர்.

வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமாக ஜெர்மனியுள் நுழைவதை தடுக்கவும், சட்டவிரோதமாக நாட்டில் தொழில் பார்ப்போரை கண்டுபிடித்து நாடு கடத்தவுமான சட்டமே இப்போது எடுக்கப்பட்டுள்ளது.

அதிகமாக இச்சட்டம் ஜெர்மனியின் அரசியல் கட்சிகளிடையே கருத்தொற்றுமையை கொண்டுவந்திருப்பதால் பெரும்பான்மை வாக்குடன் நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (கே-இ)

அமைச்சர் சுவானுக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில்;

இரண்டு இராணுவத்தினரும் செய்து முடிக்க இயலாத பணியை மிகவும் குறைந்த வசதியுடைய தமிழக பொலிசார் பெருமளவில் நிறைவேற்றியுள்ளனர்.

எனினும் புலிகள் விடயத்தில் இந்திய-இலங்கை இராணுவத்தினரின் உள்நோக்கத்தில் எவரும் சந்தேகப்படவில்லை.

தமிழ்நாட்டில் அரசியல் மற்றும் சமுதாய அமைப்புக்களிலிருந்து விடுதலைப்புலிகளின் ஆதிக்கத்தை முற்றிலும் நீக்கிவிட தாம்உறுதிபூண்டுள்ளதாகவும் இதில் எந்தவித மாற்றமும் இல்லையெனவும் கூறியுள்ளார்.

புலிகளை அடக்கத் தேவையான நடவடிக்கைகளை தமது அரசு எடுத்துள்ளதாகவும் அந்த இயக்கத்தினருடன் தான் இரகசிய உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டிருப்பதாக சில அரசியல்வாதிகள் கூறுவது வேடிக்கையானது என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (கே-இ)

## பரீட்சார்த்திகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுவதாக இருந்த பயிற்சி ஆசிரியர்களுக்கான தொலைக் கல்விப் பரீட்சையும், சிற்றூழியர் தரம் 3ற்கு ஆட்சேர்ப்பதற்கான பரீட்சையும் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். பரீட்சார்த்திகள் இந்நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறு வேண்டப்படுகின்றனர். (159-இ)

★

(யாழ்ப்பாணம்)

பொது எழுதுவினைஞர் சேவையில் அதிசிறப்பு வகுப்புக்கு (மூப்பு அடிப்படையில்) பதவி உயர்வு பெறுவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்டத்திலுள்ள பரீட்சார்த்திகள் அனைவரும் உடனடியாக இச்செயலகத்தின் பரிபாலனக் கிளையில் தங்கள் பெயரையும், தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் பதிவு செய்து கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுக் கொள்கிறார். இவ்விபரங்கள் அவர்கள் கொழும்பு சென்று பரீட்சை எழுதுவதற்கு கப்பல் மூலம் பிரயாண ஒழுங்கு செய்வதாகும். (159-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கொமணத்தாரால், யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி, ... இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Colombo under licence Number 3/10936/B